TNPSC JOB

KK9T

**கன்னியாகுமரி மாவட்டம்**

**அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025**

-----

**வகுப்பு 9**

காலம்: 3.00 மணி | **தமிழ்** | மதிப்பெண்கள்: 100

**பகுதி - I**

**15×1=15**

**குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**2. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைச் சேர்த்து எழுதவும்.**

1) திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால்காட்டும் விகுதிகள் இல்லாத திராவிட மொழி எது?
அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்

2) சிந்தாமணி என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

3) 'மாடு' என்பதன் பொருள் என்ன?
அ) கீழே ஆ) மேலே இ) பக்கம் ஈ) தொலைவு

4) பகுதி, விகுதி மட்டும் இடம்பெறும் சொல் எது?
அ) வென்றார் ஆ) வளர்க இ) நடந்த ஈ) பொருந்திய

5) முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்
ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான
இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்
ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

6) கல்வி இல்லாப் பெண்கள் எவ்வகை நிலத்திற்கு ஒப்பானவர்கள்
அ) நஞ்சை நிலம் ஆ) களர் நிலம் இ) உவர் நிலம் ஈ) புஞ்சை நிலம்

7) 'பொதுவர்கள் பொலி உறப் போர் அடித்திடும் நிலப்பகுதி'
அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

8) திருநாதர் குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக .............. உள்ளன.
அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை

9) உலகத் தாய்மொழி நாள் ..............
அ) பிப்ரவரி 21 ஆ) பிப்ரவரி 12 இ) பிப்ரவரி 23 ஈ) ஏப்ரல் 15

10) தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்?
அ) நீலாம்பிகை அம்மையார் ஆ) முத்துலெட்சுமி
இ) ஔவையார் ஈ) இராமாமிர்தம் அம்மையார்

11) தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரி நடத்தி வரும் இடம் ..............
அ) காஞ்சிபுரம் ஆ) மதுரை இ) புதுக்கோட்டை ஈ) மாமல்லபுரம்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

கல்வி இல்லாத பெண்கள்
களர் நிலம் அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை

12) இப்பாடல் இடம்பெற்ற நூல் யாது?
அ) பாண்டியன் பரிசு ஆ) இருண்ட வீடு
இ) குடும்ப விளக்கு ஈ) தமிழ்விடுதூது

Scanned with OKEN Scanner

TNPSC JOB | www.tnpscjob.com

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) பாரதியார் ஆ) கவிமணி இ) சுரதா ஈ) பாரதிதாசன்

14) 'களர்நிலம்' என்பதன் பொருள் ..............

அ) பண்படாத நிலம் ஆ) நஞ்சை நிலம்

இ) வறண்ட நிலம் ஈ) பண்படும் நிலம்

15) விளைதல் - இலக்கணக்குறிப்பு தருக.

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை

இ) தொழில்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

## பகுதி - II

### பிரிவு - 1

**4×2=8**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்:**
**வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16) **விடைக்கு ஏற்ற வினா எழுதுக:**

அ) சனி நீராடு என்பது ஔவையின் வாக்கு.

ஆ) தமிழ் மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கணநூல் தொல்காப்பியம்.

17) கண்ணி என்பதன் விளக்கம் யாது?

18) உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

19) சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

20) நடுகல் என்றால் என்ன?

21) 'தலை' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 2

**5×2=10**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:**

22) **மொழிபெயர்க்க:**

அ) Lexicon

ஆ) Volunteer

23) **பகுபத உறுப்பிலக்கணம் தருக:** பூக்கும்

24) **தொடரைப் பழமொழி கொண்டு நிரப்புக:**

அ) சித்திரமும் கைப்பழக்கம் ..............

ஆ) கற்றோருக்குச் சென்ற ..............

25) **ஒரு தொடரில் இரு வினைகளை அமைத்து எழுதுக:**

பணிந்து - பணித்து

26) **விடையைத் தமிழ் எண்ணுருவில் எழுதுக:**

அ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ..............

ஆ) சிற்றிலக்கியம் ..............

27) **பிழை நீக்கி எழுதுக:**

அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்.

ஆ) குழலியும் பாடத் தெரியும்.

28) **பொருள் எழுதித் தொடரமைக்க:**

குளவி, குழவி

## பகுதி - III

### பிரிவு - 1

**2×3=6**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்:**

29) சங்ககாலப் பெண்பாற்புலவர்களின் பெயர்களை எழுதுக.

Scanned with OKEN Scanner

30) பின்வரும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:

பௌத்த மதத்தைத் தழுவிய தமிழர்கள் புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த நிலைகளில் சிற்பங்களாகப் படைத்து வழிபட்டனர். சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர். சமண மதத்தில் சில சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும் பருமனும் உடையனவாக உள்ளன.

1. பௌத்த மதத்தைத் தழுவியவர்கள் யார்?
2. புத்தரின் உருவத்தை எத்தனை நிலைகளில் சிற்பங்களாகப் படைத்தனர்?
3. தீர்த்தங்கரர் உருவங்கள் எத்தனை?

31) 'மூன்று' என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:** **2×3=6**

**(34-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

32) நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

33) திருப்பாவை குறிப்பிடும் காலை வழிபாட்டு நிகழ்வை விளக்குக.

34) 'ஒன்றறி வதுவே'.......... எனத் தொடங்கும் உயிர்வகை மனப்பாடப் பகுதி.

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **2×3=6**

35) அளவையாகு பெயர்களின் வகைகள் யாவை? விளக்குக.

36) உவமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37) எண்ணுப்பெயர், திசைப்பெயர்களில் வல்லினம் மிகுந்து வருவதைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **5×5=25**

38) அ) தமிழ்விடுதூது உணர்த்தும் தமிழின் சிறப்புகளை எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

39) அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிச் செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை எழுதுக.

40) அ) முழுஉருவச் சிற்பங்கள் - புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

**(அல்லது)**

ஆ) **மொழிபெயர்க்க:**

1) Linguistics
2) Polyglot
3) Philologist
4) Phonetics
5) Literature
6) Phonologist



Scanned with OKEN Scanner

TNPSC JOB



41) உன்னை மகிழச் செய்த சமூகப்பணிகள் ஐந்தினை எழுதுக.

42) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



**பகுதி - V**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **3×8=24**

43) அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

44) அ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப்படைப்பை விளக்குக.

**(அல்லது)**

ஆ) இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் செய்தி கதையின் மூலமாக விளக்குக.

45) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக:**

அ) முன்னுரை - நூலகத்தின் முக்கியத்துவம் - நூலகத்திற்கு வழங்கும் வேறுபெயர்கள் - நூலகங்களில் படிக்கும் விதம் - நூலகப் பிரிவுகள் - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) **'நீர் மேலாண்மை' என்னும் தலைப்பில் குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை எழுதுக:**

முன்னுரை - நீர் மேலாண்மையின் முக்கியத்துவம் - நிலத்தடி நீர்மட்டம் குறைவதற்கான காரணம் - நீரைச் சேமிப்பதற்கான வழிகள் - முடிவுரை.

----------

Scanned with OKEN Scanner

TNPSC JOB | www.tnpscjob.com